| | | | |
|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | |
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **20/01/2024** முதல் **24/01/2024** |
| அறிக்கை எண் : | **006/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/01/2024** |

### தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (14.01.2024 முதல் 18.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/01 | 15/01 | 16/01 | 17/01 | 18/01 | தேதி | நாள்-1 20/01 | நாள்-2 21/01 | நாள்-3 22/01 | நாள்-4 23/01 | நாள்-5 24/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 25 | 25 | 25 |
| 22 | 21 | 21 | 19 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 18 | 18 | 17 | 18 | 18 |
| 4 | 3 | 3 | 2 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 4 | 4 | 4 |
| 88 | 82 | 85 | 85 | 87 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 53 | 50 | 50 | 41 | 55 | | 60 | 50 | 50 | 50 | 40 |
| 6 | 7 | 7 | 6 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 6 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 20 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 17°-18° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு(19ஜன- 01 பிப்ரவரி 2024):**

### மழைப்பொழிவு :

19-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

### அதிகபட்ச வெப்பநிலை :

12-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலேயே நிலவுவதால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மண்ணின் ஈரப்பதத்தை பொருத்து, காய்கறி பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பருத்தி, அவரை, கால்நடை.**

**பருத்தி:**

இறவை குளிர் கால பருத்தியில் மிகக்குறைந்த வெப்பநிலை காரணமாக பூக்கள் உதிர்வு தென்படுகிறது. இதனை கண்காணித்து என்.ஏ.ஏ. 40 பிபிஎம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்

**அவரை:**

அவரை பயிரில் காய் நாவாய்ப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது.

இவ்வகைப் பூச்சிகளின் தாக்குதலால் காய்களில் கருப்புநிறப் புள்ளிகள் காணப்படும், இளம் பச்சைக் காய்கள் உதிரும், காயின் உள்ளே வளர்ச்சி இன்றி பருப்புகள் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 600 கிராம் என்ற அளவில் பிவேரியா பேசியானா எனும் உயிரி இடுபொருளை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் தற்போது நிலவிவரும் அதிக பனி காரணமாக தங்களது கால்நடைகளை குந்து நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

இதனை தவிர்க்க பனிகாலங்களில் தங்களது கால்நடைகளை வெட்டவெளியில் பனியில் கட்டாமல் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். மாட்டுக் கொட்டகைகளின் பக்கவாட்டில் சணல் சாக்குகளை கட்டி வைக்கவும்.